DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **SC.No.54/2025**
Prosecution Witness **P.W.18**

Name : **திரு. மாணிக்கராஜ்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

A5 எதிரி ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கள் செய்யப்பட்டது, மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 07.04.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்போது இணை போக்குவரத்து ஆணையர் செயலாக்கம் சென்னை அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11. 2024 ஆம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் உத்தம பாளையத்தில் பணியாற்றியபோது சின்னமனூர் காவல் நிலைய குற்ற எண் 349/ 2024 வழக்கில் சம்பந்தப்பட்ட TN 60 BX 9952 என்ற பதிவெண் கொண்ட R15 என்ற வாகனத்தின் விபரம் அடங்கிய படிவம் 24 எங்கள் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட படிவம் 24 அ.த.சா.ஆ.41, மேற்கண்ட வாகனம் சதீஷ்குமார் த/பெ. சின்ன கருப்பையா, நம்பர் 61, வடக்கு தெரு, உப்புக்கோட்டை, போடிநாயக்கனூர் தாலுக்கா என்ற முகவரியில் உள்ளது. என்னிடம் காண்பிக்க கூடிய அந்த பைக்கின் புகைப்படம் தான் அ.த.சா.ஆ.42 தற்போது மேற்கண்ட வாகனம் காவல் நிலைய கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த வாகனம் சா.பொ. 14 ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் தான் எங்கள் அலுவலகத்தில் இருந்து ஆவணங்கள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பான சொத்தை எனது நேரடி பார்வைக்கு ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை தனிப்பட்ட முறையில் விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக போலீசார் கேட்டுக் கொண்ட ஆவணங்களை எங்கள் அறிக்கை வாயிலாக தான் வழங்குவது வழக்கம் என்றால் சரிதான். நான் இந்த ஆவணம் வழங்கவில்லை என்றும் எங்கள் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.07 18:03:08 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.